# பேராதனைப் பல்கலைக்கழகம்

## தொடர் தொலைக் கல்வி நிலையம்

## பௌதிகப் புவியியல் (GGYE 102)
## முதல் கலைப் பரீட்சை_(வெளிவாரி) 2018

**அறிவுறுத்தல்கள்:** முதலாம் (01) வினா உட்பட எவையேனும் நான்கு (04) வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. இவ்வினாப் பத்திரத்தில் எல்லாமாக ஏழு (07) வினாக்கள் உள்ளன. எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

**காலம்: மூன்று மணித்தியாலங்கள்**

---

(01) (i) "புவியியல்" என்ற பாடத்தினை வரையறை செய்வதுடன், அதன் உப பிரிவுகளையும் குறிப்பிடுக. (06 புள்ளிகள்)

(ii) பௌதிகப் புவியியலின் நோக்கினை (Scope) சுருக்கமாக விளக்குக. (07 புள்ளிகள்)

(iii) நீர் மண்டலம், உயிரின மண்டலம் பாறை மண்டலம் மற்றும் வளிமண்டலம் ஆகியவற்றிற்கு இடையிலான இடைத் தொடர்புகளை பொருத்தமான விளக்கப்படங்களின் உதவியுடன் விளக்குக. (12 புள்ளிகள்)

(02) (i) புவியின் உள்ளடக்கம் மற்றும் அமைப்பினை விளக்குக. (05 புள்ளிகள்)

(ii) சமுத்திர தகடு மற்றும் கண்டத் தகடு ஆகியவற்றுக்கிடையிலான ஒற்றுமை மற்றும் வேற்றுமைகளை பொருத்தமான வரைபடங்களுடன் ஒப்பீடு செய்க. (08 புள்ளிகள்)

(iii) புவி உட்பகுதியின் பிரதான இடைவெளிகளை வரிசைப்படுத்துவதுடன், புவிக் கோளவகத்தின் குணாதிசயங்கள் பற்றியும் விளக்குக. (12 புள்ளிகள்)

(03) (i) புவியின் வளிமண்டலம் எந்தளவுக்கு முக்கியம் பெறுகின்றது? (05 புள்ளிகள்)

(ii) வளிமண்டலப் படைகளைக் குறிப்பிட்டு, மாறன் மண்டலத்தின் பங்களிப்பினையும் (Role) விளக்குக. (10 புள்ளிகள்)

(iii) மானிட நடவடிக்கைகள் எவ்வாறு வளி மாசடைவுக்குக் காரணமாகின்றன என்பதனை விவரிக்குக. (10 புள்ளிகள்)

ம.ப.பா.

(04) (i) 'சூழல் தொகுதி' என்ற பதத்தினை வரையறை செய்க (05 புள்ளிகள்)

(ii) அயன மழைக்காட்டு சூழல் தொகுதியின் பிரதான குணாதிசயங்களை வரிசைப்படுத்துக. (08 புள்ளிகள்)

(iii) இலங்கையில் ஈர நில சூழல் தொகுதிகளின் மீதான மானிட செல்வாக்கு பற்றி கருத்துரைக்குக. (12 புள்ளிகள்)

(05) (i) 'காலநிலை மாற்றம்' என்பதிலிருந்து விளங்கிக் கொள்வது என்ன? (05 புள்ளிகள்)

(ii) காலநிலை மாற்றத்தினை ஏற்படுத்தும் பிரதான காரணிகளைக் குறிப்பிடுக. (08 புள்ளிகள்)

(iii) காலநிலை மாற்றத்தின் பிரதான விளைவுகளையும் அவற்றின் தாக்கங்களைக் குறைப்பதற்கான தனிப்பு நடவடிக்கைகளையும் விளக்குக. (12 புள்ளிகள்)

(06) (i) நீரியல் வட்டத்தின் பிரதான தொழிற்பாடுகளை பொருத்தமான விளக்கப்படங்களின் உதவியுடன் விளக்குக. (05 புள்ளிகள்)

(ii) பூகோள காட்டுப் போர்வைக்கும் நீரியல் வட்டத்திற்கும் இடையிலான இடைத்தொடர்பினை சுருக்கமாக விவரிக்குக. (10 புள்ளிகள்)

(iii) நீரியல் வட்டத்தின் மீது மனிதன் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றான் என்பதனை ஆராய்க. (10 புள்ளிகள்)

(07) பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டு** பற்றி சிறு குறிப்புக்கள் எழுதுக. (25 புள்ளிகள்)

(i) அல்ப்ரட் வெக்னரின் கண்ட நகர்வு கருதுகோள்.

(ii) மண்ணில் பிரிகையாக்கிகளின் பங்களிப்பு.

(iii) இலங்கையில் வெள்ள அனர்த்தங்கள்.

(iv) வறண்ட பிரதேச படிதல் நிலவுருவங்கள்.